
# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஜகத்குரு சங்கராச்சார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை



மனிதனுடைய அகம்பாவத்துக்கு காரணமான அவனுடைய பணம், பாண்டித்தியம் அல்லது பலம் அவனை கர்வம் கொள்ள செய்கிறது, ஆனால் இந்த மமதை உண்மையில் சத்ரு என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அது அவனை மிகவும் தொந்தரவு செய்து தவறுகளிளும் ஈடுபட வைக்கிறது.

தன்னை யாரும் எதிர்க்க முடியாது என்று அவன் தவறாக நினைக்கிறான், செய்கிறான். ஆனால் அவனுடைய கெட்ட கர்மாவினால் அவன் கஷ்டங்களை அனுபவிப்பது நிச்சயம். அகம்பாவத்தை கைவிட்டு இருந்தாலே இதையெல்லாம் தவிர்த்து இருக்கமுடியும்.

பகவத்பாத சங்கரர் கூறுகிறார் :-


மனிதன் பணம், யௌவனம், பாண்டித்யத்தின் காரணமாக கர்வப்படக்கூடாது. எல்லாவற்றையும் காலம் எடுத்துச்சென்று விடும். அவை சாஸ்வதமானவையே அல்ல, என்கிறார்..

பகவத் பாதர் போன்ற மஹரிஷிகள் எவ்வளவு அறிவாற்றல் பெற்றிருந்தாலும் துளி கர்வம் கூட இல்லாதவர்கள். அதனால் தான் ஜனங்கள் அவர்களை மஹாபுருஷர்கள் என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஆதலால் எக்காரணத்தைக் கொண்டும் அகம்பாவம் கொள்ளாமல் மனிதன், எளிமையுடன் வாழவேண்டும்.


ஒருவனுடைய சத்துருவும் தொண்டையில் முள் மாதிரி குத்துவதும் ஆன இந்த அகங்காரத்தை அழித்து விட்டு தன்னை கட்டுப்படுத்துவதில் உள்ள சுகத்தை வேண்டுமளவு அடைய ஞானத்தை விரும்பி செல்பவன் நிச்சயம் அறிவான்.

-



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita





## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸந்தேகம் தெளிதல்

**(பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓம்காரானந்தர்)**



**கேள்வி : தேவாரம், திருவாசகம், பிரபந்தம் இவையெல்லாம் திருவள்ளுவரின் ஞான மொழிகளைக் குறிப்பிடாதது ஏன்? பக்தியும் ஞானமும் வேறுவேறா? அல்லது சிலர் சொல்வது போல் திருவள்ளுவர் சமணர் என்பதாலா?**

**ஸ்வாமிஜீ :** தாங்கள் கூறியுள்ள அருளாளர்களுடைய நூல்களில் திருக்குறள் கருத்துக்கள் பரவியுள்ளன. (காண்க: திருக்குறள் ஆராய்ச்சிப்பதிப்பு, பதிப்பாசிரியர், கி.வா. ஜகந்நாதன், கோவை ஸ்ரீ ராமக்ருஷ்ணாவித்யாலய வெளியீடு) பக்தியே மெய்ஞ்ஞானத்தை நல்குகிறது. உடையவனின் பக்தி மெய்ஞ்ஞானம் பூரணமானது. இக்கருத்தை உய்த்துணர்க. திருவள்ளுவரின் கருத்துக்கள் இந்நாட்டில் தோன்றிய ஸமய உட்பிரிவுகள் அனைத்துக்கும் பொருந்தும்.

**கேள்வி : இறந்தவர்களுக்கு சிராத்தம் கட்டாயமாகக் கடமையாகச் செய்யவேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுவதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்து ஓதாது உணர்ந்து மக்களுக்கு வழிகாட்டியாக இருந்து ஜோதியான (படித்தது) வள்ளலார் அவர்கள் இறந்தவர்களுக்குக் 'கருமாதி செய்யக்கூடாது என்கிறார். இவ்விரண்டில் எதை ஏற்றுக்கொள்வது?**

**ஸ்வாமிஜீ :** தாங்கள் இரண்டையும் குழப்பிக்கொள்ள வேண்டாம். தங்களுக்கு யாருடைய கருத்து ஏற்புடையதாகத் தோன்றுகிறதோ அதனையே பின்பற்றுங்கள். எனது கருத்தை அறிய விரும்புவீர்களாயின், ஸாஸ்த்ரங்கள் சொன்னபடியே செயல்படவேண்டும் என்பதாகும். (காண்க ஸ்ரீமத் பகவத்கீதை 16ம் அத்யாயம் 24ம் ஸ்லோகம் மற்றும் திருக்குறள் 5ம் அதிகாரம் 3ம் குறள்)

(தொடரும்)

நன்றி : வேதநெறி, வெப்: https://www.vedaneri.org/

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள்.


11. நகம், மயிர் இவை நம் உடலிலிருந்து வளர்ந்து உயிரற்ற சிறகு போலாகும். ஆதலால் நாள் பார்த்து மாஸத்திற்கு ஒருமுறை க்ருஹஸ்தன் வபனம் செய்து கொள்ள வேண்டும். நாமே செய்து கொள்ளக் கூடாது. நக்ஷத்திரம், திதி, வாரம் பார்ப்பது நம் முன்னோர் வழக்கம். திதியை கவனிக்கவேண்டியது மிக அவசியம். சதுர்த்தியில் வபனம் செய்து கொண்டால் மாதாவுக்கு நாசம். சதுர்த்தசி ஸகோதரிக்கு நாசம். ஷஷ்டி சகோதரருக்கு ஆகாது, அமாவாஸ்யை, பௌர்ணமி, ஏகாதசி, த்வாதசி பிதாவுக்கு நாசம். ப்ரதமை தனத்தை அழிக்கும். நவமி தான்யத்தை அழிக்கும். அஷ்டமி குடும்பத்தையே அழிக்கும். திங்களும் புதனும் வபனத்திற்குச் சிறந்த நாள், சனி, வெள்ளி, செவ்வாய் கூடவே கூடாது. சாவு தீட்டில் பங்காளிகளுக்கு க்ஷவரமும், தர்ப்பணமும், அவசியம். க்ஷவரம் செய்துக்கொள்ளவேண்டிய 10-வது நாள் வெள்ளிக்கிழமை வந்தால், 9-வது நாளே வியாழனன்றே செய்துகொள்ள வேண்டும். தீட்டிலும் சிராத்தத்திற்கு முன்புமாவது ஸர்வாங்க க்ஷவரம் செய்துகொள்ள வேண்டியது மிக முக்கியம்.

12. நகத்தை நாம் கிள்ளக் கூடாது. கிள்ளினால் உடனே ஸ்நானம் செய்யவேண்டும். நகத்தால் பூமியைக் கீறக்கூடாது. கிள்ளிய நகத்தை வீட்டிற்கு வெளியே போடவேண்டும். நகத்தைப் பல்லினால் கடிக்கலாகாது. அப்படி கடிப்பவரே தனக்கு ஸ்திரமாக வஸிக்கும் இடம் என மூதேவி கூறுகிறாள்.


13. துரும்பு, தர்ப்பம், புஷ்பம் இவைகளை நகத்தால் கிள்ளக்கூடாது. குடிக்கும் தீர்த்தத்தில் நகம் படக்கூடாது. வென்னீர் சூடாயிருக்கிறதா என்று பார்க்க விரலைவிடுவது தப்பு. தீர்த்தத்தை கையில் விட்டுப் பார்க்கவேண்டும். நகத்தால் பிறர்மீது ஜலந்தெளித்தால் நகச்சுத்தி வரும். நிவேதனம் செய்யும் வாழைப்பழத்தை நகத்தால் கிள்ளக்கூடாது. நுணியில் விரலால் கிள்ள வெண்டும். ஸ்வாமிக்கு அறைக்கும் சந்தனத்தை நகத்தால் வழிக் கக்கூடாது. விரலின் உட்புறத்தால் வழிக்க வேண்டும்.

14. மண்ணாங்கட்டி, ஓடு, கறி இவைகளைக் காரண மின்றி பொடி செய்யலாகாது.

(தொடரும்....)







# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

## குறியும் நெறியும்

(ஸ்வாமீ பூர்ணானந்தர்)

உண்மையான பயணம்

உண்மையான பயணம் அல்லது வாழ்க்கை, நாம் உள்ளே திரும்பும் போது தான் துவங்குகிறது.

ஏனெனில் துன்பங்களை நீக்குவதற்கான தீர்வையும், இன்பத்தையும் வெளியிலேயே புறத்திலேயே கொண்டிருக்கும் வரை ஒருவன் தவறான தேடிக் பாதையிலேயே -எதிர்த்திசையிலேயே பயணப்படுகிறான். உண்மையான பயணம் அல்லது வாழ்க்கை உள்ளே நாம் திரும்பும்போதுதான் துவங்குகிறது. ஒருவன் தான் யார்? என்பதை அறிந்து. அதிலேயே நிலைபெறும் போது அப்பயணம் நிறைவடைகிறது. அதன்பின் அவன் அடைய வேண்டியது இதையே நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

தன்னையறிந்தவன் துன்பங்களைக் கடக்கிறான் (சாந் உபநிஷத் 7-1-3) வெளிவிஷயங்களில் ஆசையற்ற மனதையுடையவன். ஆத்மாவிடத்தில் எந்த ஸுகம் இருக்கிறதோ அடைகிறான். (ப.கீதை 5-2) அதை

ஞானத்தால் பாபத்தைப் போக்கடித்துக் கொண்டவர்கள் பிறவாமையை அடைகிறார்கள். (ப.கீதை 5-17)

ஞானமென்கிற அக்நி எல்லாக் கர்மங்களையும் எரித்துவிடும். (ப.கீதை 4-37)

மனிதன் தன்னிலேயே திளைப்பவனாகவும், தன்னிலேயே நிறைவுற்றவனாகவும், தன்னிலேயே மகிழ்ச்சி அடைந்தவனாகவும் இருக்கிறானோ அவன் செய்யவேண்டியது என்பது ஒன்றுமில்லை (ப.கீதை 3-17)

உலகில் பல விஷயங்களைப் பற்றிய அறிவு நமக்கு இருக்கலாம் நாம் மிகப்பெரிய விஜ்ஞானியாக இருக்கலாம். சிறந்த மருத்துவராக. பொறியியல் வல்லுநராக பேராசிரியராக, தொழிலதிபராக, ஓவியராக, கவிஞராக, கலைஞராக இருக்கலாம். ஆனால் நம்முடைய உண்மையான ஸ்வரூபம் என்ன என்பதை உண்மையான முகம் அறியாமல் வாழும்வரை வாழ்க்கை அர்த்தமற்றதே. (தொடரும்) நன்றி : வேதநெறி
வெப்: https://www.vedaneri.org/

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# வேத மந்திரங்களின் சிறப்புகள்

**க்ருஷ்ண யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை (காண்டம் 1)**
**(1.1.2 அனுவாகம் 2)**

15. பூஷன் பல மந்திரங்களை இணைத்துக் கொடுக்கட்டும். அந்த மந்திரக் கொத்தைப்பிடித்துக் கொண்டு மேலே ஏறுவேனாக.

16. இந்திரனின் புஜங்களால் (மந்திரங்களை) நான் உன்னைத் தாங்குகிறேன். (இந்திரன் - தெளிந்த புத்தி)

17 - 18. ப்ரஹஸ்பதியின் சிரஸால் உன்னைப் பிடிக்கிறேன். நீ பரந்த அந்தரிக்ஷத்தில் பிரயாணம் செய் (ப்ரஹஸ்பதி மந்திரங்களின் அதிபதி)

19. நீ தேவர்களிடம் செல்லுகிறாய்

**(1.1.2 அனுவாகம் 2)**
**(9 யஜுஸ்; 1 ரிக்)**
**(சந்தம்: 8, காயத்ரி)**

1. தேவர்களுக்காகச் செய்யப்படும் யக்ஞ கர்மாவின் பொருட்டு யக்ஞமே நீ மிகவும் புனிதமானவனாக இருப்பாயாக.

2. நீயே விண்ணுலகை ஆதாரமாக கொண்ட ஜீவசக்தியே ப்ரகாசமாக இருப்பாயாக. நீயே வானுலகம் நீயே அனைத்தையும் தாங்குபவன். ஹே யக்ஞமே! நீ தான் பலமான ஆதாரம். அப்படிப்பட்ட நீ திடமாக அசையாதா படி சலனப்படாதே. நமது பிராத்தனையின் மூலமாக இந்த யக்ஞயமானது நம்மை திடமானவனாகவும் சஞ்சலமில்லாதவனாகவும் செய்யும்.

3. நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் பெருகும் வஸுக்களைப் புனிதப்படுத்துபவன் நீயே.

(வஸு - செல்வம், ஒளி பொருந்தியது (மங்களமானது), பொருட்களின் உள்ளுறை பவன் (அனைத்திலும் இருப்பவன்) என 3 பொருட்கள் கொள்ளலாம்.)
(தொடரும்….)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# சில உபநிஷத்துக்களின் சாரம்

## || ப்ரஹ்மோபநிஷத் ||

10. அந்த ஸூத்ரத்தை அணிந்தால் அது எச்சிலாகவோ அசுத்தமாகவோ போகாது. ஞானப்பூணூலணிந்த எவர்களுடைய ஸூத்ரம் உள்ளே போய் விட்டதோ அவர்களே உலகில் ஸூத்திரத்தின் ரகசியத்தை உணர்ந்தவர்கள். அவர்களே உலகில் உண்மையான பூணூலணிந்தவர்கள்.

11. ஞானமே சிகையாகவும், ஞானமே பூணுலாகவும் உடையவர்கள் ஞானத்தில் நிலைபெற்றவர்கள். அவர்களுக்கு ஞானத்தை விட உயர்ந்த தொன்றுமில்லை. ஞானந்தான் புனிதத்தன்மையளிப்பதாகக் கூறப்படுகிறது.

12. அக்னியைப் போன்ற ஞானசிகையல்லாது மற்றது சிகையாகாது. எவனுடைய சிகை ஞானமயமானதோ அந்த அறிவாளியே சிகையுடையவனாகக் கூறப்படுவான்; கேசத்தைத் தரிக்கும் மற்றவர்களல்லர்.



13. வைதீக கர்மங்களில் அதிகாரமுடைய பிராம்மணர் முதலிய எவர்கள் உண்டோ அவர்களால் கருமத்திற்கு அங்கமாக இந்தப்பூணூல் அணியப்பட வேண்டும் என்பது தான் தர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டதாகும்.

14. எவனுடைய சிகை ஞானமயமானதோ, பூணுலும் அப்படியே ஞானமயமானதோ அவனுக்கு பிராம்மணத்துவம் முழுதும் சித்திக்கும் (வேதம் முழுவதிற்கும் அதிகாரம்) என்று வேதத்தை அறிந்தவர்கள் உணர்ந்தார்கள்.

15. இந்தப்பூணூலே சிறந்ததும், நாடியடையத்தக்கதுமாகும். அதை அறிந்தவனே யக்ஞோபவீதமணிந்தவனாவான். அவனே யக்ஞமும் யக்ஞம் செய்பவனும் என்று அறிவாளிகள் உணர்ந்தார்கள்.

16. (ஞானமாவது) தெய்வம் ஒன்றே, அது எல்லா உயிர்களுள்ளும் மறைந்துளது எங்கும் நிறைந்தது, எல்லாப்பிராணிகளுக்கும் அந்தராத்மா, எல்லாச் செயல்களையும் மேற்பார்வை செய்வது எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையாய் வசிப்பது, ஸாக்ஷியாயிருப்பது, அறிவாயிருப்பது, தான்தானாக விளங்குவது, குணங்களைக் கடந்தது.

(தொடரும்....)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |